Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/21**

Paper 2 Reading and Writing **October/November 2020**

INSERT **1 hour 45 minutes**

*9009397288-I*

**INFORMATION**
- This insert contains the reading passages.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

**தகவல்**
- இந்த இணைப்பில் படிக்கும் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன.
- இந்த இணைப்புப் பகுதியில் விடைக்கான குறிப்புகளை. வெற்றிடத்தில் குறித்துக்கொண்டு திட்டமிடலாம். ஆனால் கேள்விக்கான **விடைகளை இங்கே எழுதக்கூடாது**.

This document has **4** pages. Blank pages are indicated.


© UCLES 2020

பகுதி 1

கட்டுரை **ஒன்றைப்** படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

## தேனீயின் நன்மைகள்

லதா வீட்டு தோட்டத்தில் அழகான பூச்செடிகள் நிறைய இருந்தன. அந்த கோடைக் காலத்தில், முதல் முறையாக அவர்கள் தோட்டத்தில் நிறைய தேனீக்கள் வரத் தொடங்கின. தோட்டத்தில் விளையாடச் செல்லும் பொழுது, லதாவின் காதின் அருகில் தேனியின் ரீங்காரம் கேட்டது. அதைக் கேட்டு லதா பயந்து ஓடத் தொடங்கினாள். தன் அம்மாவிடம் சென்று, தோட்டத்தில் இருக்கும் பூச் செடிகளை எல்லாம் வெட்டி விடலாம் என்று அழத் தொடங்கினாள். தேனீக்கள் தன்னை கொட்டி விடுமோ என்று பயந்தாள். தேனீயின் கொட்டு மிகுந்த வலி தரும் மற்றும் அதன் விஷம் பலருக்கு ஒவ்வாமை ஏற்படுத்தும் என்று அவள் பாடத்தில் படித்ததை தன் பயத்தின் காரணமாக கூறினாள். அப்போது லதாவின் அம்மா, ஒவ்வாமை அல்லது அலர்ஜி எனப்படுவது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமானதாக இருக்கக்கூடும். மேலும் ஒவ்வாமைக்கு தேனீக்கள் மற்றும் அல்லாமல் வேறு பல காரணங்கள் உண்டு. தேனீ மனித இனத்தில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது என்பது உனக்கு தெரியுமா? தேனீக்கள் தேன் உருவாக்குவதுடன் பல நன்மைகளை நமக்கு செய்கின்றன. தேனீக்கள் பூவுக்குப் பூ சென்று மகரந்தச் சேர்க்கைக்கு உதவுகின்றன. இதனால் சில மரஞ்செடிகள் காய்த்து விதையிட்டு இனம் பெருக்குவதில் தேனீக்கள் முக்கிய பங்கு வகிக்கிறன என்று எடுத்து கூறினார்.

அந்த சனிக்கிழமை லதாவின் அம்மா, அவளை அழைத்துக் கொண்டு பக்கத்தில் இருந்த பூங்காவிற்கு சென்றார். அப்போது அவள் அம்மா லதாவின் சிந்தனையைத் தூண்டும் விதமாக “நீ நம் வீட்டின் அருகிலோ, பொது இடங்களிலோ தேனியின் கூடுகளை பார்த்தது உண்டா?” என்று கேட்டார். தேனீ சுறுசுறுப்பு, கூட்டு முயற்சி, தலைமைக்கு கட்டுப்படுதல் போன்ற குணங்களின் உதாரணமாக கருதப்படுகிறது. ராணித்தேனீ கூட்டில் வசித்து முட்டையிடும். மற்ற வேலைக்காரத் தேனீக்கள் தேனை சேகரிப்பது போன்ற பணிகளை செய்யும். ராணித்தேனீ வேலைக்காரத் தேனீக்களை தமது கட்டுப்பாட்டில் வைத்து சேர்ந்து வாழும் பண்பை வலியுறுத்துகிறது. நீ உன் உணவில் தேனைக் கலந்து உண்டு இருக்கிறாய், நினைவு இருக்கிறதா என்று அம்மா கேட்டார். தேனை உணவில் சேர்த்து கொள்வது மிகவும் நல்லது. பல்வேறு நோய்களைத் தீர்க்கும் குணங்களைக் கொண்டது தேன். பல பாட்டி வைத்திய மருந்துகள் தேன் அருந்துவதை அன்றாட வாழ்க்கையின் முக்கிய அம்சமாக சொல்கின்றன. உடல் பருமனை குறைக்க/ஏற்ற, சளி, இருமல் போன்றவைக்கு தேன் மிக முக்கிய மருந்தாக எடுத்து கொள்ளப்படுகிறது என்று அம்மா சொன்னார்.

அண்மைக் காலங்களில் பெருந்தொகையாக தேனீக்கள் அழிந்துவருகின்றன. இதற்காக தேனீ வளர்ப்பவர்கள், அறிவியலாளர்கள், அரசியல்வாதிகள் என்று பலரும் குரல் கொடுத்து வருகின்றனர். தேனீக்கள் தாவரங்களின் இனப்பெருக்கத்திற்கு உதவும் மகரந்தச்சேர்க்கையில் பங்கெடுப்பதால், மனிதர்களின் உணவுச் சங்கிலியில் தேனீக்கள் இன்றியமையாதது. உலக வெப்பமயமாதலும், புதை படிவ எரிமங்களின் எரிப்பும் மரங்களை அழிக்கின்றன மரங்களின் அழிவு தேனீக்களை பாதிக்கிறது. தேனீக்களின் அழிவு பலவகை பயிர்கள், பழவகைகள் உற்பத்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதனால், இவை முக்கிய பிரச்சனைகளாகக் கருதப்படுகின்றன என்று அம்மா தேனீயின் முக்கியத்துவத்தை உரைத்தார்.

இவ்வாறு பேசிக்கோண்டே லதாவும் அம்மாவும், பூங்காவிற்கு வந்து சேர்ந்தனர். அங்கே செயற்கைத் தேனீ வளர்க்கும் வசதி கொண்ட இடத்திற்கு, லதாவை அம்மா அழைத்துச் சென்றார். தேனீக்களின் கூடு கட்டும் நிலைகள் பார்ப்பதற்கு அழகாக இருந்தன. தேனீக்கள் நடனம் மூலம் தங்களுக்குள் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்வதை பார்த்து, லதா வியந்தாள். தேனீயின் கூடு பொதுவாக மரங்கள், மலைக் குகை, மனிதர்கள் எளிதில் அடைய முடியாத கட்டிடத்தின் முடுக்கு, பொந்துகள் போன்றவற்றில் கட்டப்பட்டிருக்கும் என்று அம்மா கூடுகளைப் பற்றிக் கூறினார். இவற்றின் கூட்டு அறை மிக சரியாக அறுகோண வடிவத்தில் இருக்கும். இப்படி பல நன்மைகளைத் தரும் தேனீக்கள் நம் வீட்டுத் தோட்டத்தில் இருக்கும் பூக்களில் இருக்கும் உணவைத் தேடி வரும் போது, இதை நாம் அழிக்கலாமா? என்று சிந்தனை தூண்டும் வகையில் கேட்டார் அம்மா.

பகுதி **2**

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

கட்டுரை **2**

## அழிந்துவரும் துருவக் கரடிகள்

சிவாவும் அவர் மனைவியும் குழந்தைகள், பேரக்குழந்தைகள் என்று நிறைவான வாழ்க்கையை வாழும் வயதான தம்பதியினர். அவர்களின் எழுபதாவது பிறந்த நாளில் அவருடைய குழந்தைகள் ஒரு சுற்றுலாப் பயணம் செல்வதற்கான செலவுகளை ஏற்று அவர்களுக்கு பரிசு தர முடிவு செய்தனர். அதிலிருந்து, அவர்கள் மிக ஆர்வமாக சுற்றுலாவிற்கு செல்ல தயார் செய்தனர். பல இடங்களை ஆலோசனை செய்து, கடைசியாக அவர்கள் கனடா செல்வதற்கு முடிவு செய்தனர். மூன்று வாரம் பயணம் செல்வதாக முடிவு செய்தார்கள். அதில் ஒரு வாரம், துருவக் கரடிகள் இருக்கும் ஒரு ஆர்டிக் தீவின் அருகில் தங்குவதற்கு முடிவு செய்தனர்.

அவர்கள் பல நாட்கள் ஆவலுடன் எதிர்பார்த்த துருவக் கரடிகளைப் பார்க்கும் நாள் வந்தது. கனடாவின் எல்லிஸ்மியர் தீவை அடைந்தனர். உலகின் அறுபது சதவீதம் பனிக்கரடிகள் கனடா நாட்டில் வசிக்கின்றன. அங்கு பனிக்கரடிகளைக் கன்காணிக்க சிறிய மின்காந்த துகடுகள் அதன் உடம்பில் வைத்து, அது செல்லும் இடங்களை செயற்கைக் கோள்கள் மூலமாக கண்காணிக்கும் வசதிகள் உள்ளன. அவ்வாறு கரடிகள் செல்லும் போது, அதன் இருப்பிடத்தை வைத்து, சுற்றுலா பயணிகளுக்கு தூரத்தில் இருந்து பார்ப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். சில மணி நேரம் காத்திருந்ததின் பிறகு இரண்டு சிறிய கரடிகள் வந்தன. அவை உறைந்த பனியை உடைத்து தண்ணீரில் வேட்டையாடத் தொடங்கின. துருவக் கரடிகள் நீரிலும் நிலத்திலும் வேட்டையாடும். இவற்றின் முதன்மை உணவு சீல் (கடல் சிங்கம்) பிராணிகள் ஆகும். பிறகு மேலும் உறைந்த பனியை உடைத்து நீந்தத் துடங்கின. வேட்டையாடும் போது துருவக்கரடிகள் தங்கள் மூக்கை மூடிக் கொள்ளும். இவற்றின் உடம்பு வெள்ளையாய் இருந்தாலும் மூக்கு கருப்பாய் இருப்பதால், மற்ற விலங்குகளுக்கு அடையாளம் தெரிந்து விடும். அதனால் மூக்கை மறைப்பதன் மூலம் பனி படர்ந்த ஆர்டிக் நிலப்பரப்பில் தன்னைத் தெரியாதவாறு வேட்டையாடும் அழகைப் பார்த்து சிவாத் தம்பதியினர் மிகவும் சந்தோஷப்பட்டனர். தண்ணீரின் உள்ளேயும் வெளியேயும் நீந்திச் சென்று விளையாடத் தொடங்கின. சிறிது நேரத்தில் இரண்டு பெரிய கரடிகள் அங்கே வந்தன. அவைகளைப் பார்த்ததும், சிறிய கரடிகள் ஓடிச் சென்று விளையாடத் தொடங்கின. இதை தூரத்தில் இருந்து பார்த்த சிவா தம்பதியினர் ஆனந்தப்பட்டனர். சிறிது நேரம் கழித்து, கரடிகள் ஒரு பெரிய பாறைக்கு பின்னால் சென்று மறைந்து விட்டன. கரடிகள் எங்கு செல்கின்றன என்று கண்காணிப்புக் கருவியின் மூலம் வியந்து பார்த்துக் கொண்டிருந்தனர். மாலை நேரம் வந்ததால், இளைப்பாரச் சென்றனர்.

துருவக் கரடிகளுக்கு இயற்கையான வாழிட எதிரிகள் ஏதும் இல்லை. மனிதர்களே துருவக்கரடிகளின் முதல் எதிரி. வேட்டையாடுவது மற்றும் உலக வெப்பமயமாதல், இதன் அழிவிற்கு முக்கிய காரணங்கள் ஆகும். காடுகளை அழிப்பது, புதை படிவ எரிமங்களின் எரிப்பு, வாகனங்களின் அதிகரிப்பு, என்று மனிதர்களின் பல செயல்கள் உலகின் வெப்பநிலை கூடுவதற்குக் காரணங்களாக அமைகிறது. கூடி வரும் வெப்பநிலை கடல் மட்டத்தை உயரச் செய்து பல அழிவுகளை ஏற்படுத்துகிறது. வெப்பநிலை அதிகரிப்பது துருவக்கரடிகள் வாழும் ஆர்டிக் பகுதிகளில் அதிக பாதிப்பு ஏற்படுத்துகின்றது. உறைந்த பனி இல்லா விட்டால் துருவக்கரடிகள் அழியக் கூடிய வாய்ப்பு அதிகமாகிறது. மனிதர்கள் இயற்கையை அழிப்பதன் மூலம் பல விலங்குகளின் அழிவுக்கு காரணம் ஆகின்றோம். துருவக்கரடிகளும் அவ்வாறே அழிந்து வருகின்றன. சிவாத்தம்பதிகளுக்கு அதை நினைக்கையில் மிகவும் கவலை உண்டாகியது.

© UCLES 2020